1971 ஜூலை 21]

பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தல்

* 354 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பீடித்தொழில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் வணிகத்துறையைப் பொறுத்தமட்டில் பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றும் இல்லை

திரு. கே. எ. வகாப் : இன்றைய தினம் வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கும் அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக் கூறி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள சிகரெட் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்சாலைகளில் உள்ள நவீன முறைகளைக் கண்டு, நம் நாட்டில் பீடித் தொழிலாளர்கள் காசநோய் போன்ற பல வியாதிகளால் அல்லல்படுகிறார்கள். ஆகவே, அதை என்றாவது நவீன முறையில் அதை அமைக்கும் திட்டத்தோடு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசைப் பொறுத்தவரையில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இதை நடத்தி வருகின்றன. தனியார் துறையில் எந்தளவு இதைப் புகுட்பிக்க வேண்டுமென்று கேட்டால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Staff of High Court.

* 355. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the staff of the High Court stayed away from work in November 1970; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1970 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று சென்னை உயர்நீதிமன்றப் பணியாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் "சென்னை உயர்நீதி மன்றப் பணியாளர் சங்கத்தை" உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி வேலைக்கு வாராமல் நின்றனர். அதேநாளன்று தலைமை நீதிபதியவர்கள் அச்சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கினார். உயர்நீதி மன்றப் பணியாளர்கள் 30—11—1970 திங்கட்கிழமையன்று வேலைக்குத் திரும்பினர்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any members of the staff have been punished on account of this agitation ?

THE HON. THIRU S. MADHAVAN : I have no information.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் பணியாளர்கள் வெளியே உண்ணாவிரதம் இருந்தபோது 'ப்ரஸ்டீஜ்' என்ற காரணத்தை வைத்து அவர்களுக்கு உடனடியாக அங்கிகாரம் கொடுக்காத காரணத்தினால்தான் இந்தப் போராட்டம் நீடித்தது என்றும் உடனடியாக அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரித்திருந்தால் இது நீடித்திருக்காது என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பணியாளர்கள் சங்கம் உயர் நீதிமன்றத்தைப்பொறுத்தவரை தனியாக அங்கிகாரம் கேட்டார்கள். அதைப் பற்றி அவர்கள் பரிசிலிப்பதாக முடிவு இருந்தது. உடனடியாக வேண்டுமென்று கேட்டார்கள். முதலில் அதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று விரும்பியதாகத் தெரிகிறது. இருந்தாலும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் இதற்கு உடனடியாக அங்கிகாரம் கொடுத்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவைக் கண்டிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : உயர் நீதி மன்ற ஊழியர்கள் சங்கம் இப்போது அங்கிகரிக்கப்பட்டுள்ளதா? அதற்கு அந்தஸ்து ஏதேனும் தரப்பட்டிருக்கிறதா உயர்நீதிமன்றத்திலிருந்து ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் சொன்னேன்.

Building for District Court at Krishnagiri

* 356. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the construction of the building for the District Court at Krishnagiri has been started; and

(b) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கிருஷ்ணகிரியில் ரூ. 14.50 லட்சம் செலவில் அனைத்து நீதிமன்றங்களும் இணைந்துள்ள வகையில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு 1971, ஜூன் திங்களில்தான் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. சொ. காவேரிமணியம் : நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுகின்ற நேரத்தில் அதிலே பணிபுரிகின்ற வழக்கறிஞர்கள் தங்க தனி அறைகள் அமைத்து கட்சிக்காரர்களோடு கலந்து பேசவும், ஓய்வு பெறவும் வழி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றக் கட்டடத்திற்குப் பக்கத்திலே வழக்கறிஞர்கள் ஓய்வு எடுப்பது வழக்கம் இல்லை என்று கருதுகிறேன். அவர்களுக்கு அங்கே நல்ல வேலை இருக்கும். இருந்தாலும் ஒரு இடத்தில் தங்க வேண்டுமென்பதற்காக ஒரு பெரிய ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கே வழக்கறிஞர் பயிற்சி எடுக்கிறார்களோ அங்கே அப்படிப்பட்ட ஒரு ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது.